# அரசறிவியல்

## அரசியல் சிந்தனை



© www.e-thaksalawa.moe.gov.lk

தேர்ச்சி 04

உலகில் நிலவும் அரசியலமைப்பு மாதிரி வகைகளின் அடிப்படையில் அரசியலமைப்புக்களை பகுத்தாயும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.

# பாதி சமஷ்டி அரசியலமைப்பு



பாதி (அர்த்த) சமஷ்டி அரசியலமைப்பில் ஒற்றையாட்சி அரசியலமைப்பினதும் பண்புகளை ஒருசேர அடையாளப்படுத்த முடியும். இதன்படி

01 ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டியாட்சி என்ற இரு வகைகளுக்கும் இடைப்பட்ட அரசியலைப்பாக கருதலாம்.

02 அர்த்த சமஷ்டிக்கு சிறந்த உதாரணமாக இந்தியாவைக் கருதலாம்.

03 இந்தியாவின் அரசியலமைப்பு முறையினை ஒற்றை அல்லது சமஷ்டி அரசியமைப்பென்று அழைக்காது அர்த்த சமஷ்டி அரசியலமைப்பாக கருதப்பகின்றது.

04 இரட்டை அரசாங்க நிறுவனங்கள் அரசியலமைப்பின் உயர்தன்மை என்பன இந்திய சமஷ்டிக்குரிய பண்புகள் ஆகும்.

தொகுப்பு : திருமதி.பி.ஜனேந்திரன் , ஆசிரியர் (அரசறிவியல்) (யா/சுண்டிக்குழி மகளீர் கல்லூரி,)

கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , ஆசிரியர் (த.தொ.தொ.) (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**05** ஒற்றைக்குடியுரிமை பதவிநிலை முறையின் ஆதிபத்தியம் அரசியலமைப்பினூடாக மத்திய அரசாங்கத்திற்கு பெருமளவிலான அதிகாரங்கள் கொடுக்கப்பட்டமை ஒற்றையாட்சிக்குரிய பண்புகளாகும்.

**06** மத்திய அரசுக்கு சார்பாக அதிகார பகிர்வு இடம்பெற்றமை.

உதாரணமாக அவசரகால நிலை பிரகடனம் செய்திருக்கும் போது பிராந்திய அரசாங்கங்களின் அதிகாரப் பட்டிணல் தொடர்பில் மத்திய அரசு சட்டங்களை உருவாக்க முடியும். அத்துடன் மத்திய அரசாங்கத்திற்கு பிராந்திய அரசாங்கங்களின் நிறைவேற்று அதிகாரங்களை கட்டுப்படுத்த முடியும். அவசரகால நிலையின் போது இந்திய அரசியலமைப்பு ஒற்றையாட்சிப் பண்புகளை வெளிக்காட்டும்.

## இந்திய அரசியலமைப்பில் அவசர காலநிலை வகைகள்

| தேசிய அவசரகால நிலை | பிராந்திய அவசரகால நிலை | நிதி நெருக்கடி நிலை |
|---|---|---|
| யாப்பின் 352 ம் உறுப்புரை ஜனாதிபதியால் அவசரகால நிலை பிரகடனம்<br>**சந்தர்ப்பம்**<br>வெளியக ஆக்கிரமிப்பு<br>உள்ளக ஆக்கிரமிப்பு | யாப்பின் 356 ம் உறுப்புரை ஜனாதிபதியால் அவசரகால நிலை பிரகடனம்<br>**சந்தர்ப்பம்**<br>யாதாயினும் ஒரு மாநிலத்தில் அரசியல் அமைப்பு இயந்திரம் செயலிழக்கும் போது | யாப்பின் 360 ம் உறுப்புரை ஜனாதிபதியால் அவசரகால நிலை பிரகடனம்<br>**சந்தர்ப்பம்**<br>இந்திய நிதி ஸ்திரத்திற்கு நெருக்கடி ஏற்படும் போது |


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

07

சாதாரண காலங்களிலும் மத்திய அரசாங்கத்தின் பாராளுமன்றத்திற்கு பிராந்திய சட்டத்துறையின் அனுமதியின்றி சாதாரண பெரும்பான்மையுடன் புதிய பிராந்தியங்களை உருவாக்கவும் அல்லது பிராந்தியங்களின் எல்லைகளை மாற்றியமைக்கவும் முடியும்.

**கே.சி.வியர் :-** அமெரிக்க அரசியலமைப்பு மரபார்ந்த சமஷ்டியாக விளங்கும் அதே நேரம் இந்திய அரசியலமைப்பை விளங்குவது அர்த்த சமஷ்டி அரசியலமைப்பு என்றாகும்.



**அமெரிக்க அரசியலமைப்பு**



**இந்திய அரசியலமைப்பு**

- இது மேலதிகமாக ஒற்றையாட்சி பண்புகளைக் கொண்ட சமஷ்டி அரசியலமைப்பு என்பதிலும் பார்க்க மேலதிக சமஷ்டி பண்புகளைக் கொண்ட ஒற்றையாட்சி அரசியலமைப்பாகும்.
- இதனை அவர் கூறும் போது ''**இந்திய அரசியலமைப்பு தன்மையில் சமஷ்டி என்றாலும் சாராம்சத்தில் ஒற்றையாட்சி ஆகும்.**''
- எனினும் நடைமுறையில் இந்திய அரசியல் அமைப்பில் சமஷ்டி பண்புகள் வலுவடைந்து உள்ளமையைக் காணலாம்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



01.பாதி (அர்த்த) சமஷ்டிக்கு உதாரணம் இந்திய அரசியல் யாப்பு மாதிரியாகும். ஆராய்க?

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

........................................................................................................................

தொகுப்பு : திருமதி.பி.ஜனேந்திரன் , ஆசிரியர் (அரசறிவியல்) (யா/சுண்டிக்குழி மகளீர் கல்லூரி,)

கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , ஆசிரியர் (த.தொ.தொ.) (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk